## அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கம் - 2017

அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் (283 அதிகாரம்) மற்றும் 1983 இன் 18 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க அதிகாரச்சட்டத்தின் 18(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கத்துவம் இல்லாமலாக்கப்பட்ட அங்கத்தவர்களின் பங்களிப்புப் பணக் கணக்குகளில் தீர்வு செய்யப்படாதிருந்த ரூபா 12,062,928 செலவு மீதியை முறைப்படி இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கத்துவர் மரணித்தமை அல்லது ஏனைய காரணங்களின் பேரில் அறவிடுவதற்கு நிலுவையாக உள்ள கடன்பட்டோரான நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 11,272,222 ஆன மீதிகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கத்துவர் இடமாற்றம், வெளிநாட்டு தூதுவர் சேவையில் ஈடுபடுதல், வெளிநாடு செல்லல் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் அறவிடுதல் நிலுவையாக இருந்த ரூபா 2,185,885 ஆன பங்களிப்புத் தொகை மற்றும் ரூபா 7,098,717 ஆன கடன் தவணை உள்ளடக்கப்பட்ட மொத்தம் ரூபா 9,284,602 ஆன நிலுவை மீதியொன்று 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்படாதிருந்தமை கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1891 இன் 05 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க பிரமாணக் குறிப்பின் 16(1), (2) மற்றும் (3) ஆம் பிரிவுகள் | ஆறு கடன் வகைக்குரிய கடன் பணத்தின் எல்லைகள் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அதற்கான விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த விதிகள் திருத்தப்படாமல் பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளுக்காக ரூபா 500,000 கடன் பணத்தை வழங்குவதற்கும், ஓய்வூதிய நிதியத்திற்காக அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 2,099,785 இனை அறவிடுவதற்கும் அவ்வாறு அறவிடப்பட்ட தொகையில் ரூபா 2,467,414 தொகையை அங்கத்தவர்களுக்குச் செலுத்துவதற்கும் மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

(ஆ) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் திருத்திய பிரமாணக்குறிப்பு

| | |
|---|---|
| (i) 1 ஆம் அத்தியாயத்தின் 10(1) ஆம் பிரிவு | அங்கத்தவர் ஒருவரின் இறப்பை அறிவித்து இரண்டு மாதங்களுக்குள் அவருக்கு உரித்தான உதவுதொகையை செலுத்த வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 46 அங்கத்தவர்களுக்காக அவ்வாறு செலுத்த வேண்டிய ரூபா 2,035,000 மரண உதவு தெகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1 ஆவது அத்தியாயத்தின் 7(ஆ)(i) ஆம் பிரிவு | 6 கடன் தவணைகளுக்கு மேல் நிலுவையாகவுள்ள 15 அங்கத்தவர்களுக்காக பிரமாணக் குறிப்பிற்கு இணங்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சங்கத்தின் நிதி விளைவுகள் ரூபா 51,606,969 மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 44,653,408 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,953,561 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் கடன் வட்டி வருமானம் ரூபா 8,292,494 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 34,982,548 தொகையான வரிக்குப் பிந்திய இலாபம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. அவ்வாறே அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி, ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொண்டதால் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 58,369,240 தொகையான நிறுவனத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 81,116,152 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சங்கத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சங்கம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடத்தில் கீழ்மாடியின் வளாகத்தின் ஒரு பகுதி 2013 ஆம் ஆண்டில் வெளித்தரப்பினர் ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அறவிடவேண்டிய நிலுவை வாடகையாக ரூபா 127,000 ஆக இருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சங்கத்திற்கு கிடைத்திருந்த நானாவித வருமானம் மற்றும் ஏனைய பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,660,266 தொகை முறையாக இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கத்தவர்களின் அடிப்படை சம்பளத்திலிருந்து அங்கத்தவர் இணங்கிய சதவீதமொன்று அங்கத்தவர் பங்களிப்புத் தொகையாக சங்கத்தினால் மாதாந்தம் அறவிடப்படும். எனினும், அங்கத்தவரின் ஆரம்ப சம்பளம் வருடாந்தம் அதிகரித்திருந்த போதிலும், அதிகரித்த ஆரம்ப சம்பளத்திற்கு இணங்க அங்கத்தவர்களிடமிருந்து பங்களிப்புத் தொகை அறவிடப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடன்தொகை வழங்கும் போது சம்பளத்திலிரந்து மாதாந்தம் கடன்தொகை வழங்கப்படக்கூடிய 40 சதவீத எல்லை தொடர்பாக கவனம் செலுத்தாமல் கடன் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 5,125,418 ஆன ஆதனக் கடன் மீதியொன்று காணப்படும் 5 அங்கத்தவர்களின் கடன் தவணைகள் 3 இற்கும் 12 இற்கும் இடைப்பட்ட அளவொன்று நிறுவனத்தினால் அளவிடப்பட்டு சங்கத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் சகல அரச நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டின் குறித்ததாக அரச சேவை சங்கத்தினால் தமது விடயப் பரப்பிற்குரிய செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள் திட்டம்

சங்கத்தினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்த மாற்றங்களை கருத்திற்கொண்டு பெறுகை திட்டத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 6,566,500 பெறுமதியான 9 செயற்பாடுகள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் திட்டத்தில் உள்ளக்கப்படாத ரூபா 342,755 கூட்டுத்தொகையான 4 செயற்பாடுகளுக்கு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

58 விடயங்களுக்குரிய பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான பெறுமதிகளுக்குமிடையே 10 சதவீதம் முதல் 164 சதவீதம் வரையான வீச்சில் விலகல் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சங்கத்தின் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | மரண படிக்கொடை முறைமை | மரண உதவு தொகை செலுத்துவதிலுள்ள தாமதத்தை தடுக்கக்கூடிய முறையான திட்டமொன்று காணப்படாமை. |
| (ஆ) | சங்கத்தின் பதவியணியினர் கடன் நிர்வாகம் | பதவியணியினர் கடன், கணனி முறைமை மூலம் நிர்வகிக்கப்படாமை. |